கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
முன்னிலை:- திரு.பி.இளங்கோ, பி.எஸ்.சி., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

அ.சா.3 நாள்: 20.10.2022

அமர்வு வழக்கு எண். 75/2019

பெயர் மகாதேவன் த/பெ

வயது தொழில்

ஜாதி மதம்

கிராமம் தாலூக்கா

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

முதல் விசாரணை:

நான் தற்போது பெருமாள்பேட்டையில் குடியிருக்கிறேன். மீன்பிடி தொழில் செய்து வருகிறேன் எதிரியை தெரியாது பார்த்திருக்கிறேன் 2013 ஆம் ஆண்டில் ஒரு நாள் 11.11.2013 அன்று காலை 7 மணிக்குள் காரைக்கால் நண்டலாறு செக் போஸ்டில் தடுப்பு கம்பி உடைந்துகிடந்ததைப் பார்த்தேன். நான் பார்த்த சமயத்தில் மீன் ஏற்றிய வண்டி ஒன்று நின்றது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதற்கு அனுமதிக்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

போலிசார் விசாரணையில் 11.11.2013 அன்று காலை 6 மணியளவில் நண்டலாறு செக்போஸ்டில் எதிரி TN 51M 1902 என்ற லாரியை வேகாமக ஓட்டிவந்து காவலர்கள் நிறுத்த சொல்லியும் நிறுத்தாமல் சோதனைசாவடியின் இரும்பு தடுப்பை உடைத்து வேகமாக சென்றதை நான் பார்த்து அதன் சேத மதிப்பு ரூ.12 ஆயிரம் இருக்கும் என்று போலிசார் விசாரித்தபோது சொன்னதாகவும் தற்போது எதிரிக்கு பயந்துக்கொண்டு உண்மையை மறைத்து கேள்விப்பட்டதாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

இல்லை.